DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.101/2024 | Deposition of Witness for : PW7 |
| Name : Dr.ஆத்திக்குமார் | Father/Husband Name : திரு.பிச்சை மணி |
| Age : 53 | Village : |
| Taluk : | Calling : முதன்மை மருத்துவர்,<br>ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 08 July 2026.

A1 to A5 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் தற்போது ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 02.03.2024 அன்று சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது காலை 8.10 மணியளவில் தனது சகோதரியால் அழைத்து வரப்பட்ட உதயகுமார் என்பவர் நேரில் ஆஜராகி என்னை இரவு 12.00 மணியளவில் தெரிந்த 6 நபர்கள் கம்பி மற்றும் கைகளால் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக கூறினார். மாடசாமி என்பவரின் வீட்டின் முன்பு வைத்து சம்பவம் நடைபெற்றது. அவரை பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் இருந்தது. 1) மார்பில் சுமார் 3 x 1 1/2 x 1/2 செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. 2) நெற்றியிலும் வலது கன்னத்திலும் 3 x 2 செ.மீ அளவில் மூன்று சிராய்ப்பு காயங்கள் சிவந்து காணப்பட்டன. 3) வலது மார்பிற்கு அடியில் சுமார் 10 x 4 செ.மீ அளவில் பெரிய சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 4) வலது புஜத்தின் பின்புறத்திலும் வலது கை மூட்டிலும் சுமார் 4 x 2 செ.மீ அளவில் மூன்று சிராய்ப்பு காயங்கள், இரத்தம் உறைந்து காணப்பட்டது. 5) வலது விலாவில் வலி இருப்பதாக கூறினார். 6) வலது கால் மூட்டின் வெளிப்புறத்தில் 2 x 1/2 செ.மீ அளவில் இரண்டு சிராய்ப்புக் காயங்கள் காணப்பட்டன.

2. நான் அவருக்கு சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கிருந்து கிடைக்கப்பெற்ற சிகிச்சை குறிப்புகளின்படி அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணமானவை என்று விபத்துப் பதிவேடு சான்று அளித்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.1 உதயகுமார் என்பவரின் விபத்துப் பதிவேடு சான்றிதழ் நான் வழங்கியதுதான். **அந்த விபத்துப் பதிவேடு அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

3. இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்து தவறி விழுந்தால் மேற்படி



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.08 17:38:28 +0530

காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. கொத்தனார் வேலை பார்க்கும் போது சாரத்தில் இருந்து கீழே தவறி விழுந்தால் மேற்கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நான் அ.சா.1 க்கு முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்தேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு அ.சா.1 எந்த வாகனத்தில் வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. நான் அன்றைய தேதியில் சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் பொறுப்பு மருத்துவ அதிகாரி என்றால் சரிதான். சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் உள்ள 108 ஆம்புலன்ஸ் எங்கெல்லாம் செல்கிறது, யார் இறந்தார்கள் என்ற விபரங்கள் எனக்கு தெரியவருமா என்றால் அது சென்னையில் உள்ள அலுவலகத்தில் தான் அந்த விபரங்கள் பராமரிக்கப்படுகிறது, எனக்கு அதுகுறித்து தெரியாது.

4. பொதுவாக 108 ஆம்புலன்ஸ்சில் ஒருவரை அழைத்து வந்தால் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் தான் அவரை சிகிச்சையில் சேர்ப்பார்கள் என்றால் சரிதான், ஆனால் நடக்க முடிந்தவர்கள் நடந்து வருவார்கள். நோயாளிகள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என நாங்கள் விசாரிப்போம் என்றால் என்ன நோய் என்றுதான் பார்ப்போம். யார் அழைத்து வந்தார்கள் என்று விசாரிப்போம் என்றால் சரிதான். அ.சா.1 க்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் என்னென்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் Treatment Particulars ல் குறிப்பிடப்பட்டிருக்கும். Treatment Particulars ஐ காவல்துறை அதிகாரிகள் என்னை விசாரிக்கும்போது நான் அவர்களிடம் கொடுத்தேனா என்றால் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து காவலர்கள்தான் அந்த ஆவணத்தை வாங்கி வருவார்கள். Treatment Particulars சம்பந்தப்பட்ட காவல்துறையினரிடம் நான் கொடுக்க வேண்டும் என்று மருத்துவ Counsil சட்டத்தில் விதி உள்ளதா என்றால் அந்த ஆவணம் பாதுகாப்பாக வாங்கிக் கொண்டு வரவேண்டியது என்பதனால் காவலர்கள் அதை வாங்கிக்கொண்டு வருவார்கள்.

5. பொதுவாக அரசு நிறுவனங்களுக்கு ஒரு ஆவணத்தை கொடுத்து அனுப்பும் போது endorsement செய்து தான் கொடுத்து அனுப்புவார்கள் என்றால் தெரியாது. திருநெல்வேலியில் இருந்து கிடைக்கப்பெற்ற அ.சா.1 ன் Treatment Particulars ஐ நான் பார்வையிட்டேனா என்றால் அதை வைத்துதான் காயச்சான்றிதழ் வழங்கப்படும். என்னிடம் காவல்துறை அதிகாரிகள் அ.சா.1 ன் Treatment Particulars ஐ தரும்போது அந்த ஆவணம் மூடப்பட்டு முத்திரை செய்யப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் அ.சா.1 க்கு முதலுதவி சிகிச்சை மட்டும் தான் அளித்தேன், அதனால் அ.சா.1 க்கு மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் தான் காயங்கள் குறித்து காயச்சான்றிதழ் வழங்க முடியும் என்றால் சரியல்ல. அ.சா.1 ன் Treatment Particulars ஐ போலீசார் கொண்டு வரும்போது அதை திருத்துவதற்கு வாய்ப்புண்டா என்றால் அவ்வாறு திருத்தம் செய்தால் அதை எளிதாக கண்டுபிடிக்க முடியும்.

6. நான் அ.சா.1 க்கு கொடுத்த காயச்சான்றிதழ் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.1 ன் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ல், அ.சா.1 ன் உடம்பில் தீயினால் ஏற்பட்ட காயங்கள் எதுவும் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் அறுதியிட்டு கூற முடியாது. பொதுவாக


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.08 17:38:34 +0530

கம்பியை பழுக்க வைத்து ஒருவர் மீது இழுத்தால் அந்த காயம் தீயால் தான் ஏற்பட்டுள்ளது என்று தெளிவாக தெரியும் என்றால் அதனுடைய Force ஐ பொறுத்தான் இருக்கும், லோசாக பட்டால் காயம் ஏற்படாது, பழுக்க வைக்கப்பட்ட கம்பி எவ்வளவு நேரம் தொடர்பில் இருந்தது என்பதைப் பொறுத்து தெரியும்.

7. 02.03.2024 அன்று காலையில் 8.10 மணிக்கு தான் அ.சா.1 மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.08 17:38:40 +0530

Judicial Magistrate, Sathankulam.